7/5/4/Sowpakkiya/H.G. 28.03.2020

சுற்றுநிருப இலக்கம் **- 03/ 2020**

மாவட்டத்திற்குப் பொறுப்பான சகல கமநல அபிவிருத்தி பிரதி / உதவி ஆணையாளர்களுக்கும், தலைமை அபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தர்களுக்கும்.

**"சுபீட்சம்"**
**பத்து இலட்சம் வீட்டுத்தோட்டங்களை அபிவிருத்தி செய்யும் துரித தேசிய வேலைத்திட்டம்.**

உலகலாவிய ரீதியியலான தொற்றுநோய் நிலையாக ஏற்பட்டுள்ள Covid – 19 (கொரோனா) வைரஸ் நோய் நிலையில் இலங்கைக்கு தொடர்ந்து வரும் நாட்களில் முகம் கொடுக்க வேண்டி ஏற்படும் உணவுப் பற்றாக்குறைக்கு தீர்வினைக் காணும் முகமாக குறுகிய மற்றும் நீண்ட கால உணவு உற்பத்தி வேலைத்திட்டங்களைச் செயற்படுத்தி, இலங்கை வாழ மக்களின் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் பொருட்டு நடவடிக்கையினை மேற்கொள்வது அத்தியாவசிய சேவையாகக்கப்பட்டுள்ளது.

02. குறுகிய கால உணவு உற்பத்தி வேலைத்திட்டத்திற்கமையத் துரிதமாக பத்து இலட்சம் வீட்டுத்தோட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு, ஜனாதிபதி விசேட செயலணிக்குழு மற்றும் மகாவெலி, விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சுத் திட்டமிட்டுள்ளது. அதற்கமைய அடுத்த இரு வார காலத்தினுள் நான்கு இலட்சம் வீட்டுத்தோட்டங்களை அபிவிருத்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது கமநல அபிவிருத்தித் திணைக்களத்தற்கு கையளிக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளுக்கமைய நடவடிக்கைகளை எடுக்கும் படி அறியத் தருகின்றேன்.

- **வீட்டுத்தோட்டங்களை இனங்காணல்**

சகல விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் பிரிவுகளிலும் ஆகக் குறைந்தது 30 வீட்டுத்தோட்டங்கயாவது உள்ளடங்கும் வகையில் அபிவிருத்தி செய்ய வேண்டிய வீட்டுத்தோட்டங்களை இனங்காணல் வேண்டும். ஒவ்வொரு மாவட்ட மட்டத்திலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய வீட்டுத்தோட்டங்களின் எண்ணிக்கை இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. உரிய கமநல சேவைகள் அதிகாரப் பிரதேசத்தில் டிப்ளோமா/ஒரு வருட/ வேறு (மகளிர் கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்களின் இணைப்பாளர்) விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் உத்தியோகத்தர் முன்னின்று, பிரிவிற்குப் பொறுப்பான விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் உத்தியோகத்தரினால் கமக்காரர்களின் ஒழுங்கமைப்பு/ மகளிர் கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்களின் ஒத்துழைப்புடன், வீட்டுத்தோட்டங்களை அடையாளம் காணுதல் வேண்டும். இனங்காணப்படும் வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையாளர்களின் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கம் தொலைபேசி இலக்கம் ஆகிய தகவல்கள் அடங்கிய பட்டியலை (இணைப்பு 02) 04.04.2020 ஆந் திகதிக்கு முன்னர் கமநல சேவைகள் நிலையங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். நிலைய மட்டத்தில் மேற்படி தகவல்கள் அடங்கிய கோவைகளை மாவட்ட அலுவலகத்தில் பேணுதல் வேண்டும் என்பதுடன், அதன் மூலம் வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையாளர்கள் தொடர்பான தரவுத் தொகுதியொன்றைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

- **மரக்கறி விதைகளை விநியோகித்தல்**

i. மாவட்டத்திற்குரிய வீட்டுத்தோட்டங்களின் எண்ணிக்கமையத் தேவையான விதை வகைகளை மாவட்ட அலுவலகத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மாவட்டத்திற்கு வழங்கப்படும் விதைகளின் அளவை, கமநல சேவைகள் நிலைய மட்டத்தில் தெரிவு செய்யப்படும் வீட்டுத்தோட்ட எண்ணிக்கையின் பொருட்டு வழங்குதல் வேண்டும்.

ii. கமநல சேவைகள் நிலையங்களுக்குக் கிடைக்கப் பெறும் அளவிலான விதைகளை நிலைய அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யப்படும் வீட்டுத்தோட்ட எண்ணிக்கையின் பொருட்டு விதைப் பொதிகளை, வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளின் பிரகாரம் பொதியிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

iii. வீட்டுத்தோட்ட விதைப் பொதியொன்றில் உள்ளடங்கப்பட வேண்டிய விதை வகைகள் மற்றும் அளவுகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அமைதல் வேண்டும். சகல மாவட்டங்களின் பொருட்டும் கத்தரி, பச்சை மிளகாய், அவரை, வெண்டி மற்றும் பயற்றம் விதைகள் வழங்கப்படும்.

**வீட்டுத்தோட்ட விதைப் பொதியொன்றில் உள்ளடங்கப்பட வேண்டிய விதை வகைகள்**

| | | | |
|---|---|---|---|
| கத்தரி | - | 0.25g | ( விதைகள் 25 – 30) |
| பச்சை மிளகாய் | - | 0.25g | ( விதைகள் 25 – 30) |
| அவரை | - | 3.00g | ( விதைகள் 10– 12) |
| வெண்டி | - | 1.67g | ( விதைகள் 25– 30) |
| பயற்றை | - | 3.00g | ( விதைகள் 25– 30) |

iv. கமநல சேவைகள் நிலையத்தில் இலக்கிடப்பட்ட வீட்டுத்தோட்டங்களின் எண்ணிக்கமைய தயாரிக்கப்படும் விதைப் பொதிகளின் எண்ணிக்கையை, கமநல சேவைகள் குழுவின் இருப்புப் புத்தகத்திற்கு உட்படுத்துல் வேண்டும் என்பதுடன், விதைப் பொதியொன்றை இருபது ரூபாவிற்கு ( ரூபா 20.00) விலைக்கு கமநல சேவைகள் குழுவினால் விற்பனை செய்தல் வேண்டும்

v. விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் உத்தியோகத்தர்களுக்கு ஒவ்வொரு பிரிவுகளுக்கும் தேவையான விதைப் பொதிகளின் அளவை வழங்குதல் வேண்டும். விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள் அற்ற பிரிவுகளின் பொருட்டு கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்களின் உத்தியோகத்தர்களின் மூலம் வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு விதைப் பொதிகளை வழங்குதல் வேண்டும்.

vi. தெரிவு செய்யப்பட்டுள்ள வீட்டுகளின் தோட்டங்களின் நிலங்களுக்கு வீட்டுத்தோட்ட விதைப் பொதிகளை வழங்கும் சந்தர்ப்பத்தில் வீட்டுத்தோட்ட உரிமையாளரிடமிருந்து விதைப் பொதியின் பொருட்டு பணத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும் என்பதுடன், விதைப் பொதியைப் பெற்றுக் கொண்டதாக உரிய பதிவேட்டில் வீட்டுத்தோட்ட உரிமையாளரின் கையொப்பத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

vii. பிரிவின் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் /கமக்காரர்களின் ஒழுங்கமைப்பின் உத்தியோகத்தர்களினால் வீட்டுத் தோட்ட விதைப் பொதியைப் பெற்றுக் கொண்டதற்கான கையொப்பப் பதிவேட்டுடன் உரிய பணத்தை உரிய கமநல சேவைகள் நிர்வாகக் குழுவிற்கு விரைவில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் என்பதுடன், இதன் பொருட்டு பொதுப்பற்றுச்சீட்டைப் பணத்தைக் கையளிப்பவருக்கு வழங்குதல் வேண்டும். பணத்தைப் பாரம்

கொடுக்கும் போது இணைப்பு 03 படிவத்திற்கமைய, தயாரிக்கப்பட்ட ஆவணத்தைக் **கட்டாயமாக** 10.04.2020 ஆந் திகதிக்கு முன்னர் கமநல சேவைகள் நிலையத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

viii. மேலும் இவ்வேலைத்திட்டத்திற்கு மேலதிகமாக வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையாளர்களின் பொருட்டுத் தேவையான மரக்கறிக் கன்றுகளைப் பெற்றுக் கொள்ளும் சகல கமநல சேவைகள் நிலையங்களிலும் நாற்று மேடைகளை அமைப்பதற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், விதைத் தேவைகளையும் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

- **விதைககளை நாற்றல் மற்றும் நாற்று மேடைகளை அமைத்தல்**

  i. நாற்று மேடைகளை அமைத்தல் மற்றும் விதைகளைக் களத்தில் தாபித்தல் 2020 ஏப்பிறல் மாதம் 09 ஆந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 09.10 மணிக்கு மேற்குத் திசை நோக்கி சுப நேரத்தில் மேற்கொள்ளல் வேண்டும்.

- **நஞ்சு மருந்தற்ற சகல வசதிகளுடான வீட்டுத்தோட்டம்**

  i. சகல வீட்டுத்தோட்டங்களின் பொருட்டும் சேதனப்பசளையை மட்டும் பாவித்தல் வேண்டும் என்பதுடன், உள்ளூர் கிருமிநாசினிகள் மூலம் பூச்சிகளைக் கட்டுப்படுத்துதல் வேண்டும்.

  ii. ஒவ்வொரு விதை வகைகளின் பொருட்டு நாற்று மேடைகள் அமைத்தல் மற்றும் வெளிக்களத்தில் நடுவதற்கு சிபாரிசு செய்யப்பட்ட அறிவுரைகளுக்கமைய, மேற்கொள்ளப்படல் வேண்டும்.

  iii. வீட்டுத்தோட்டத்திற்குத் தேவைப்படும் பிரதானமான மரக்கறி வகைகளின் பொருட்டு மட்டும் விதைகள் வழங்கப்படுவதால், மேலும் வீட்டுத்தோட்டத்திற்குத் தேவையான மரக்கறி, கீரை வகைகள், பழப்பயிர்கள், கிழங்குப் பயிர்கள், வாசனைத்திரவியங்களுக்கானப் பயிர்கள், மூலிகைப் பயிர்களைப் பயிரிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். இதன் பொருட்டுத் தேவையான நாற்றுக் பொருட்கள் கமநல சேவைகள் நிலைய மட்டத்தில் அல்லது விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் பிரிவு மட்டத்தில் பரிமாற்றம் செய்து கொள்ளக் கூடிய ஆக்கபூர்வமான வேலைத்திட்டமொன்றை கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரினால் தயாரித்து செயற்பாட்டில் ஈடுபடுத்தல் வேண்டும்.

  iv. சுபீட்சமான வீட்டுத்தோட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் மூலம் சொழிப்பு நிறைந்த (சறுபிரி) வீட்டுத்தோட்ட எண்ணக்கரு செயற்படுத்தப்படல் வேண்டும் என்பதுடன், வீட்டுப் பாவனைக்குத் தேவையானவற்றை வீட்டுத்தோட்டத்திலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடிய சகல உணவுப் பொருட்களையும் தொடர்ச்சியாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் வீட்டுத்தோட்டத்தை பேணுவதற்கு மேற்கொள்ளல் வேண்டும்.

  v. நஞ்சு மருந்தற்ற புதிய உணவை தமது குடும்ப அலகிற்குப் பெற்றுக் கொள்வதற்கும், மேலதிக உற்பத்திகளை கமநல சேவைகள் நிலையங்களைக் கேந்திரமாகக் கொண்டு விற்பனை செய்வதன் ஊடாக குடும்பத்தின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கும் உணவுப் பாதுகாப்பு இல்லையேல் இலகுபடுத்தல் இவ்வேலைத்திட்டத்தின் ஊடாகப் பிரதானமாக எதிர்பார்க்கப்படுகின்றது.

- **செயற்படுத்தும் இயக்க முறைகள்**

இவ்வேலைத்திட்டம் உட்பட தொடர்ந்து வரும் கமத்தொழில் அபிவிருத்தி நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தும் அபிவிருத்தியின் பிரவேசத்தின் மூலம் மேற்கொண்டு, இலங்கையின் உணவுப் பாதுகாப்பினை உருவாக்கும் பொருட்டு விவசாயத் திட்டக் குழுவொன்றை (APT – Agriculture Planning Team) தாபித்தல் வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு குழுவிற்கும் உரிய அமைப்பும் மற்றும் இவ்வேலைத்திட்டத்திற்குரிய பணிப் பொறுப்புக்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

➢ **தேசிய விவசாயத் திட்டக் குழு**

தலைவர் - கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் (தலைவர்)

உறுப்பினர்கள்
- விவசாயப் பணிப்பாளர் நாயகம் அல்லது பெயர் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தரொருவர்.
- சமுர்த்தி பணிப்பாளர் நாயகம் அல்லது பெயர் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தரொருவர்.
- மேலதிக கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்
- ஆணையாளர் (சேவைகள்)
- ஆணையாளர் (அபிவிருத்தி)
- ஆணையாளர் (மனித வள அபிவிருத்தி)
- பிரதான பொறியியலாளர் (நீர் முகாமைத்தவம்)
- பிரதான கணக்காளர்

**பணிப் பொறுப்புக்கள்** - வேலைத்திட்டம் தொடர்பாக தேசிய மட்டத்தில் தீர்மானங்கள் எடுத்தல், அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்களை மேற்கொள்ளல், நாற்றுப் பொருட்களை மாவட்ட மட்டத்தில் வழங்குதல், தேசிய மட்டத்தில் மேற்பார்வை மற்றும் பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல், மாவட்டத்தின் முன்னேற்றத்தை உரிய நிறுவனங்களுக்கு முன்வைத்தல்.

➢ **மாவட்ட விவசாயத் திட்டக் குழு**

தலைவர் - மாவட்டத்திற்குப் பொறுப்பான கமநல அபிவிருத்தி பிரதி/உனதவி ஆணையாளர் (அழைப்பாளர்)

உறுப்பினர்
- மாகாண விவசாயப் பிரதிப் பணிப்பாளர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தரொருவர்.
- மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தரொருவர்.
- கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் (திணைக்களம்)
- தலைமைக் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்
- பெயர் குறிப்பிடப்படும் டிப்ளோமா விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் உத்தியோகத்தர்

- **பிரதேச விவசாயத் திட்டக் குழு**

| | | |
|---|---|---|
| தலைவர் | - | கமநல அபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தர் (அழைப்பாளர்) |
| உறுப்பினர்கள் | - | விவசாய போதனாசிரியர் |
| | - | விடயத்திற்குப் பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| | - | கமநல சேவைகள் அதிகாரப் பிரதேசத்தின் மகளிர் கமக்காரர்களின் ஒழுங்கமைப்பின் இணைப்பாளர் |
| | - | சமுர்த்தி வங்கி வலயத்தைப் பிரதிநிதிப்படுத்தி பெயர் குறிப்பிட்ட உத்தியோகத்தரொருவர். |

**பணிப் பொறுப்புக்கள்** - மாவட்ட மட்டத்தில் வழங்கப்படும் அறிவுரைகள் மற்றும் வழிகாட்டல்களுக்கமைய வேலைத்திட்டத்தை பிரதேச மட்டத்தில் செயற்படுத்தல். தேவையான விதைகளைப் மற்றும் விதைப் பொதிகளைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு வழங்கும் பொருட்டு தேவையான இணைப்பு நடவடிக்கைகள். வேலைத்திட்டம் தொடர்பான தகவல்களை மாவட்ட மட்டத்திற்கு அறிக்கையிடல்

- **ஒழுங்கு விதிகள், மேற்பார்வை மற்றும் முன்னேற்றம்**

சுபீட்சமான வீட்டுத்தோட்ட அபிவிருத்தி வேலைத்திட்டத்தை தேசிய மட்டத்தில் செயற்படுத்துவதை மேற்பார்வை செய்தல் மற்றும் முன்னேற்றத்தை அறிக்கையிடல் என்பன முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன், சகல வேலைத்திட்டங்கள் தொடர்பாகவும் செயற்படு திட்டம், தகவல்களைக் குறிப்பு வைத்தல், முன்னேற்றத்தை அறிக்கையிடல் என்பனவற்றின் பொருட்டு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதிவேட்டைப் பயன்படுத்தல் வேண்டும். அத்துடன் அறுவடை செய்யப்படும் அறுவடை தொடர்பாகவும் தரவுகளைச் சேகரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

i. ஒட்டுமொத்த வேலைத்திட்டம் தொடர்பான செயற்படு திட்டம் (இணைப்பு – 04)

ii. கமநல சேவைகள் நிலைய மட்டத்தில் விதைத் தொகைகளை விநியோகிக்கும் பதிவேடு(இணைப்பு- 05)

iii. வி.ஆ.உ.உ.பிரிவு மட்டத்தில் விதைப் பொதிகள் விநியோகப் பதிவேடு (இணைப்பு – 06)

iv. வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கை அபிவிருத்தி செய்யும் மொத்த முன்னேற்றத்தை மாவட்ட மட்டத்தில் அறிக்கையிடல் (இணைப்பு – 07) (முன்னேற்றத்தை சேவைகள் பிரிவின் insdev.dad@gmail.com) என்னும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.)

v. பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் தொடர்பான தொழில்நுட்ப அறிவுரைகள் (இணைப்பு – 08)

03. நிலவும் பிரச்சனைக்குரிய நிலையில் தேசிய உணவுப் பாதுகாப்பினை ஏற்படுத்தும் பொருட்டு எடுக்கப்படும் மேற்படி செயற்பாடுகளை நிறைவேற்றும் பொருட்டு தாங்கள் உட்பட மாவட்டத்தின் சகல அலுவலர்களினதும் முழுமையான ஒத்துழைப்பினை இதன் பொருட்டு வழங்கும் படி தயவுடன் அறியத் தருகின்றேன். இதன் பொருட்டு தாங்கள் உட்பட அலுவலக ஆளணி வழங்கும் அர்ப்பணிப்பினை மிக மேன்மையானதாகக் கருதுகின்றேன்.

**ஒப்பம்:** டபிளியூ.எம்.எம்.பீ. வீரசேகர,
**கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்.**

**பிரதிகள்:**

1. கௌரவ தலைவர் பசில் ராஜபக்ஷ அவர்கள், ஜனாதிபதி விசேட செயலணிக் குழு - த.அ.பொ.
2. ஜனாதிபதி செயலாளர், ஜனாதிபதி செயலகம் - த.அ.பொ.
3. பிரதமர் செயலாளர், பிரதம செயலாளர் அலுவலகம் - த.அ.பொ.
4. செயலாளர், மகாவெலி, விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - த.அ.பொ.
5. பணிப்பாளர் நாயகம், விவசாயத் திணைக்களம் - த.அ.பொ.
6. பணிப்பாளர் நாயகம், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் - த.அ.பொ.

7/5/4/Sowpakkiya/H.G. 28.03.2020

சுற்றுநிருப இலக்கம் **- 03/ 2020**

மாவட்டத்திற்குப் பொறுப்பான சகல கமநல அபிவிருத்தி பிரதி / உதவி ஆணையாளர்கள்,
கம்பஹா, கண்டி, மாத்தளை, நுவரெலியா, காலி, குருநாகலை, பொலொன்னறுவை, பதுளை,
கேகாலை மற்றும் வவுனியா.

**சுபீட்சம்"**

**பத்து இலட்சம் வீட்டுத்தோட்டங்களை அபிவிருத்தி செய்யும் துரித தேசிய வேலைத்திட்டம்.**

மேற்படி விடயம் தொடர்பாக இதுவரையில் தங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள 28.03.2020 ஆந் திகதிய 03/2020 என்னும் இலக்கமுடைய சுற்றுநிருபம் தொடர்பானது.

02. அதற்கமைய நாட்டில் தற்போது நிலவும் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளின் காரணமாக கன்னேறுவ விதைகள் மற்றும் நாற்றுப் பொருட்கள் அபிவிருத்தி அபிவிருத்திப் பிரிவின் மூலம் இணைப்பு இலக்கம் 01 இன் பிரகாரம் ஏனைய மாவட்டங்களின் பொருட்டு வெவ்வேறாகத் தயாரிக்கப்பட்டுள்ள விதைப் பொதிகள் ( கத்தரி, பச்சை மிளகாய், அவரை, வெண்டிக்காய், பயற்றை போன்றவை) விநியோகிக்கும் பொறுப்பைத் தங்களுக்கு இத்தால் வழங்குகின்றேன்ட

**I வது கட்டம்** - 30.03.2020 ஆந் திகதி பி.ப. 12.00 மணிக்கு பேராதெனிய விதைகள் மற்றும் நாற்றுப் பொருட்கள் அபிவிருத்திப் பிரிவினால் தங்கள் மாவட்டத்தினால் கையேற்றுக் கொள்ள வேண்டிய மாவட்டங்களின் பொருட்டு ஒதுக்கப்பட்டுள்ள மொத்த அளவு விதைப் பொதிகளைச் சரியாகக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**II வது கட்டம் -** தங்களினால் மீளக் கையளிக்கப்பட வேண்டிய மாவட்டங்களின் பிரதி/உதவி ஆணையாளர்களுடன் தொடர்பு கொண்டு 30.03.2020 ஆந் திகதியே உரிய விதைப் பொதிகளை சரியான அளவில் வழங்குதல் வேண்டும்.

03. அத்துடன் ஏனைய மாவட்டங்களுக்கு விதைப் பொதிகளை விநியோகிக்கும் போது இயன்ற சகல சந்தர்ப்பங்களின் போதும் பயணம் செய்யக் கூடிய தூரத்தைக் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

04. மேற்படி நடவடிக்கைகளின் பொருட்டு தொடர்பு கொள்வதற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளும் படி மேலும் அறியத் தருகின்றேன்.

திருமதி ரமணி செனரத், மேலதிகப் பணிப்பாளர் (மரக்கறி விதைகள் மற்றும் நாற்றுப் பொருட்கள்), விதைகள் மற்றும் நாற்றுப் பொருட்கள் அபிவிருத்திப் பிரிவு, பேராதெனிய. தொலைபேசி இலக்கம் 071 – 4206789.

**ஒப்பம்:** கே.பீ. ரசிக்க ஹேமஜித் சில்வா.
கமநல அபிவிருத்தி ஆணையாளர் (சேவைகள்),
கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்காக.

**இணைப்பு – 01**

**"சுபீட்சம்"**

**பத்து இலட்சம் வீட்டுத்தோட்டங்களை அபிவிருத்தி செய்யும் துரித தேசிய வேலைத்திட்டம்.**

**மாவட்ட மட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய வீட்டுத்தோட்டங்களின் எண்ணிக்கை**

| மாவட்டம் | அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய வீட்டுத்தோட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| அம்பாறை | 6,000 |
| திருகோணமலை | 4,000 |
| மட்டக்களப்பு | 6,000 |
| யாழ்ப்பாணம் | 7,500 |
| மன்னார் | 2,500 |
| வவுனியா | 1,500 |
| கிளிநொச்சி | 1,500 |
| முல்லைத்தீவு | 2,000 |

இணைப்பு - 02

**"சுபீட்சம்"**

**பத்து இலட்சம் வீட்டுத்தோட்டங்களை அபிவிருத்தி செய்யும் துரித தேசிய வேலைத்திட்டம்.**

**வீட்டுத்தோட்டப்பயிர்ச்செய்கையாளர்களின் பெயர்ப்பட்டியல்**

**கமநல சேவைகள் நிலையம்: ..........................................................**

**விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் பிரிவு: .................................**

| தொ.இல. | வீட்டுத்தோட்டப்பயிர்ச் செய்கையாளரின் பெயர் | முகவரி | தேசிய அடையாள அட்டை இலக்கம் | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

மேற்படி தகவல்கள் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகின்றோம்.

பெயர் ................................................

கையொப்பம் : .....................................

மகளிர் கமக்காரர்களின் ஒழுங்கமைப்பின் இணைப்பாளர்

பெயர்: ................................................

கையொப்பம்: .......................................

பிரிவிற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்

**“சுபீட்சம்”**

**பத்து இலட்சம் வீட்டுத்தோட்டங்களை அபிவிருத்தி செய்யும் துரித தேசிய வேலைத்திட்டம்.**

**வீட்டுத்தோட்டப்பயிர்ச்செய்கையாளர்களின் பொருட்டு விதைப் பொதிகள் விநியோகப் பெயர்ப்பட்டியல்**

**கமநல சேவைகள் நிலையம்: .........................................**

**விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர் பிரிவு: .................................**

| தொ.இல. | வீட்டுத்தோட்டப்பயிர்ச்செய்கையாளரின் பெயர் | தேசிய அடையாள அட்டை இலக்கம் | பயனாளிகளின் எண்ணிக்கை | பணம் | கையொப்பம் |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | மொத்தம் | | | |

மேற்படி தகவல்கள் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் உறுதிப்படுத்துகின்றோம்.

பெயர் .................................................

கையொப்பம் : .......................................

மகளிர் கமக்காரர்களின் ஒழுங்கமைப்பின் இணைப்பாளர்

பெயர்: .................................................

கையொப்பம்: ........................................

பிரிவிற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்

“சுபீட்சம்”

பத்து இலட்சம் வீட்டுத்தோட்டங்களை அபிவிருத்தி செய்யும் துரித தேசிய வேலைத்திட்டம்.

மாவட்ட மட்டத்தில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய வீட்டுத்தோட்டங்களின் எண்ணிக்கை

| தொ.இல. | கன்னோறுவ விதைகள் மற்றும் நாற்றுப் பொருட்கள் அபிவிருத்திப் பிரிவின் மூலம் விதைப் பொதிகள் பெற்றுக் கொள்ள வேண்டிய மாவட்டங்கள் | விதைப் பொதிகள் வழங்கப்பட வேண்டிய மாவட்டங்கள் | அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய வீட்டுத்தோட்டங்களின் எண்ணிக்கை | கத்தரி (0.25g) கி.கிராம்களில் | பச்சை மிளகாய் (0.25g) கி.கிராம்களில் | அவரை (3.00g) கி.கிராம்களில் | வெண்டிக்காய் (1.67g) கி.கிராம்களில் | பயற்றை (3.00g) கி.கிராம்களில |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | பொலொன்னறுவை | அனுராதபுரம் | | | | | | |
| | | பொலொன்னறுவை | | | | | | |
| | | திருகோணமலை | 4000 | 1,000 | 1,000 | 12,000 | 6,680 | 12,000 |
| | | மட்டக்களப்பு | 6000 | 1,500 | 1,500 | 18,000 | 10,020 | 18,000 |
| | | | | | | | | |
| 10 | வவுனியா | யாழ்ப்பாணம் | 7,500 | 1.875 | 1.875 | 22.500 | 12.525 | 22.500 |
| | | மன்னார் | 2,500 | 0.625 | 0.625 | 7.500 | 4.175 | 7.500 |
| | | வவுனியா | 1,500 | 0.375 | 0.375 | 4.500 | 2.505 | 4.500 |
| | | கிளிநொச்சி | 1,500 | 0.375 | 0.375 | 4.500 | 2.505 | 4.500 |
| | | முல்லைத்தீவு | 2,000 | 0.500 | 0.500 | 6.000 | 3.340 | 6.000 |

இணைப்பு - 04

"சுபீட்சம்"
**பத்து இலட்சம் வீட்டுத்தோட்டங்களை அபிவிருத்தி செய்யும் துரித தேசிய வேலைத்திட்டம்.**
**செயற்படு திட்டம்**

| தொ.இல. | செயற்பாடுகள் | காலச்சட்டம் | பொறுப்பு | மேற்பார்வை |
|---|---|---|---|---|
| 1 | தேசிய மட்டத்தில் வேலைத்திட்டத்தைத் திட்டமிடல் | 26.03.2020 | தேசிய விவசாயத் திட்டக் குழு கமநல அபிவிருத்தித் திணைக்களம் | செயலாளர், விவசாய அமைச்சு |
| 2 | வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தும் வழிமுறைகள் உள்ளடங்கிய சுற்றுநிருபத்தை மாவட்டத்திற்குப் பொறுப்பான பி. ஆ./உ.ஆணையாளர்களுக்கு வழங்குதல் மற்றும் அறிவூட்டல் | 28.03.2020 | தேசிய விவசாயத் திட்டக் குழு கமநல அபிவிருத்தித் திணைக்களம | செயலாளர், விவசாய அமைச்சு |
| 3 | மாவட்ட மட்டத்தில் பிரதேச மட்டத்திலான உத்தியோகத்தர்களுக்கு வேலைத்திட்டம் தொடர்பாக அறிவூட்டல் மற்றும் திட்டங்களைத் தயாரித்தல் | 30.03.2020 | மாவட்டத்திற்குப் பொறுப்பான பி. ஆ./உ.ஆ. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் |
| 4 | கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்திற்கு விதைத் தொகையை வழங்குதல் | 30.03.2020 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் | கமநல அபிவிருத்தி ஆணையாளர் (சேவைகள்) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் |
| 5 | பிரதேச மட்டத்தில் வெளிக்கள மட்டத்திலா உத்தியோகத்தர்களுக்கு வேலைத்திட்டம் தொடர்பாக அறிவூட்டல் | 31.03.2020 | கமநல அபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தர் | மாவட்டத்திற்குப் பொறுப்பான பி. ஆ./உ.ஆ. |
| 6 | அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய வீட்டுத்தோட்டங்களை இனங்காணல் | 02.04.2020 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் | மகளிர் கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்களின் இணைப்பாளர்கள் / பிரிவிற்குப் பொறுப்பான வி.ஆ.உ.உ. | கமநல அபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தர் |
| 7 | கமநல சேவைகள் நிலையங்களுக்கு விதைத் தொகையை வழங்குதல் | 03.04.2020 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் | மாவட்டத்திற்குப் பொறுப்பான பி. ஆ./உ.ஆ. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் (சேவைகள்) |
| 8 | வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையாளர்களின் பெயர்ப்பட்டியலை கமநல சேவைகள் நிலையங்களுக்கு வழங்குதல் | 04.04.2020 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் | மகளிர் கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்களின் இணைப்பாளர்கள் / பிரிவிற்குப் பொறுப்பான வி.ஆ.உ.உ. | கமநல அபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | வீட்டுத்தோட்டங்களின் எண்ணிக்கமைய கமநல சேவைகள் நிலைய மட்டத்தில் விதைப் பொதிகளைத் தயாரித்தல் | 06.04.2020 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் | கமநல அபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தர், க.சே.நிலையத்தின் சகல அலுவலக ஆளணியினர் மற்றும் வி.ஆ.உ.உ. | தலைமைக் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 10 | வீட்டுத்தோட்ட அபிவிருத்திற்குரிய தொழில்நுட்ப அறிவுரைகளை வழங்குதல் | 06.04.2020 ஆந் திகதி தொடக்கம் தொடர்ச்சியாக | மகளிர் கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்களின் இணைப்பாளர்கள் / பிரிவிற்குப் பொறுப்பான வி.ஆ.உ.உ. | கமநல அபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தர் |
| 11 | விதைப் பொதிகளை வி.ஆ.உ.உ.உ./கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்களின் உத்தியோகத்தர்களுக்கு வழங்குதல் | 07.04.2020 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் | கமநல அபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தர் | தலைமைக் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் |
| 12 | வி.ஆ.உ.உ.உ./கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்களின் உத்தியோகத்தர்கள் வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு விதைப் பொதிகளை விநியோகித்தல் | 07.04.2020 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் | பிரிவிற்குப் பொறுப்பான வி.ஆ.உ.உ.உ./கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்களின் உத்தியோகத்தர்கள் | கமநல அபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தர் |
| 13 | மேடைகளை அமைத்தல் மற்றும் விதைகளை நாட்டுதல் | 09.04.2020 ஆந் திகதி சுபநேரத்தில் நடுதல் | வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கையாளர்கள் | மகளிர் கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்களின் இணைப்பாளர்கள் / பிரிவிற்குப் பொறுப்பான வி.ஆ.உ.உ. |
| 14 | விதைப் பொதிகளின் பொருட்டு அறவிடப்பட்ட பணத்தை உரிய பதிவேட்டுடன் கமநல சேவைகள் நிலையத்திற்குக் கையளித்தல் (இணைப்பு 03 இன் மூலம்) | 10.04.2020 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் | பிரிவிற்குப் பொறுப்பான வி.ஆ.உ.உ.உ./கமக்காரர்களின் ஒழுங்கமைப்புக்களின் உத்தியோகத்தர்கள் | கமநல அபிவிருத்தி பெரும்பாக உத்தியோகத்தர் |
| 15 | அபிவிருத்தி செய்யப்பட்ட வீட்டுத்தோட்டங்கள் தொடர்பான முன்னேற்றத்தை தேசிய மட்டத்தில் அறிக்கையிடல் (இணைப்பு 07 மூலம்) | 21.04.2020 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் | மாவட்டத்திற்குப் பொறுப்பான பி. ஆ./உ.ஆ. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் (சேவைகள்) |

சகல க.அ.பி.ஆ./ உ.ஆ. மற்றும் க.அ.பெ.உத்தியோகத்தர்களுக்கு,

சகல வி.ஆ.உ.உ. பிரிவினுள்ளும் தெரிவு செய்யப்பட்ட 400,000 வீட்டுத்தோட்டங்களில் மரக்கறிப் பயிர்ச்செய்கையை விரிவாக்கம் செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதுடன், இதன் கீழ் ஒரு வி.ஆ.உ.உ.உத்தியோகத்தருக்கு ஆகக் குறைந்தது 30 வீட்டுத்தோட்டங்களைத் தெரிவு செய்தல் வேண்டும். இதன் பொருட்டு தெரிவு செய்யப்பட்டுள்ள வீட்டுத்தோட்டங்கள் தொடர்பான (நிலத்தின் அளவு, காணி உரிமையாளரின் பெயர், தொலைபேசி இலக்கம், முகவரி மற்றும் தேசிய அ.அ. இலக்கம் ) தகவல்களை வி.ஆ.உ.உ.உத்தியோகத்தர்களினால் க.அ.பெ.உத்தியோகத்தர்களுக்கு வழங்கி, அத்தகவல்களை மாவட்ட பி.ஆ./உ.ஆ. களுக்கு 04.04.2020 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்தின் பொருட்டும் தேவையான விதைகளை மாவட்ட பி.ஆ./உ.ஆணையாளர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், மாவட்டத்தின் தேவைக்கமைய, அவற்றை பொதி செய்வதற்கு அவர்கள் செயற்படல் வேண்டும். வி.ஆ,உ.உ. உத்தியோகத்தர்களினால் அவற்றை வீட்டுத்தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்குவதற்கு அவர்களினால் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். வழங்கப்படும் விதைகளுக்கு மேலதிகமாக மரவள்ளி, உள்ளூர் கிழங்கு வகைகள், வற்றாளை, பழ வகைகள் மற்றும் வேறு பொருத்தமான உணவுப் பயிர்களின் பொருட்டான முளைக்கும் பொருட்களை இயன்றளவில் இத்துடன் விநியோகிப்பதற்கு தங்களினால் ஒழுங்குகள் செய்தல் வேண்டும். சகல வீட்டுத்தோட்டப் பயிர்ச்செய்கைகளும் 10.04.2020 ஆந் திகதிக்கு முன்னர் நிலத்தில் ஆரம்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன், அதற்கான சுபநேரமாக 09.04.2020 ஆந் திகதி மு.ப. 9.10 மணிக்கு (மேற்குப் பக்கத்தை நோக்கி) உள்ளதுடன். இப்பயிர்ச்செய்கைகளுக்குத் தேவையான கொம்போஸ்ட் மற்றும் சேதனப்பசளை (திரவப் பசளையும் உட்பட) வி.ஆ.உ.உ. பிரிவு மட்டத்தில் உற்பத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். இதன் பொருட்டான திணைக்களச் சுற்றுநிருபம் பின்னர் வெளியிடப்படும்.

க.அ.ஆ.நா.

සියළුම ගො.සං.නි.කො./ස.කො හා ගො.සං.ප්‍රා.නි. වෙත,

සියළුම කෘ.ප.නි.ස. කොට්ඨාශ තුල හදුනාගත් ගෙවතු 400,000 ක එළවලු වගාවන් ව්‍යාප්ත කිරීමට රජය තීරණය කර ඇති අතර, මේ යටතේ එක් කෘ.ප.නි.ස. වරයෙකු අවම වශයෙන් ගෙවතු 30 ක් හදුනාගත යුතුය. මේ සඳහා හදුනාගත් ගෙවතු පිළිබඳ (බිම් ප්‍රමාණය, ඉඩම් හිමියාගේ නම, දුරකථන අංකය, ලිපිනය හා ජා.හැ.ප.අංකය) තොරතුරු කෘ.ප.නි.ස. වරුන් විසින් ගො.සං. ප්‍රා.නි. වරුන් වෙත ලබාදී, එම තොරතුරු දිස්ත්‍රික් නි.කො./ස.කො. වරුන් වෙත 2020.04.04 දිනට පෙර එවීමට ක්‍රියා කල යුතුය. එක් එක් දිස්ත්‍රික්කය සඳහා අවශ්‍ය බීජ දිස්ත්‍රික් නි.කො./ස.කො. වරුන් වෙත ලබාදීමට ක්‍රියා කරන අතර, දිස්ත්‍රික් අවශ්‍යතාවය අනුව ඒවා පැකට් කිරීමට ඔවුන් ක්‍රියා කල යුතුය.

කෘ.ප.නි.ස. වරුන් විසින් ඒවා ගෙවතු හිමියන් වෙත ලබාදීම ඔබ විසින් සංවිධානය කල යුතුය. ලබාදෙන බීජ වලට අමතරව මඤ්ඤොක්කා, දේශීය අල වර්ග, බතල, පළතුරු වර්ග හා වෙනත් සුදුසු ආහාර බෝග සඳහා වන ප්‍රරෝහන ද්‍රව්‍ය හැකිතාක් මේ සමග බෙදාදීමට ඔබ විසින් සංවිධානය කල යුතු වේ. සියළු ගෙවතු වගාවන් 2020.04.10 දිනට පෙර භූමියේ ස්ථාපිත කල යුතු අතර, ඒ සඳහා වන සුභ නැකතක් 2020.04.09 දින පෙ.ව. 9.10 ට (බටහිර බලා) පවතින අතර, මෙම වගාවන් සඳහා අවශ්‍ය කොම්පෝස්ට් හා කාබනික පොහොර (දියර පොහොර ද ඇතුළුව) කෘ.ප.නි.ස. කොට්ඨාශ මට්ටමෙන් නිපදීමට ක්‍රියා කල යුතුය. මේ සඳහා වන දෙපාර්තමේන්තුවේ චක්‍රලේඛය පසුව නිකුත් කරනු ඇත.

ගො.සං.කො.ජ.